**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8-ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு 1-ம் சாட்சியின் வாக்கு மூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி உதவியாளர் திரு.சுவர்ணரத்தினக்குமார் என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | விஜயராணி | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**8.2.2024 OS No.57/2020 வா.சா.1** விஜயராணி **ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:**

**1.** நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 வகுப்பு படித்துள்ளேன். ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிராது ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரியாக தெரியவில்லை. என் கணவர் எந்த வருடம் கிராம நிர்வாக அலுவலராக பணிக்குச் சென்றார் என்றால் திருமணத்திற்கு முன்பே பணிக்கு சென்றார். எந்த வருடம் பணிஓய்வு பெற்றார் என்றால் 2016 ஆண்டு ஆகும். எந்தெந்த சர்வே எணகளில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்துள்ள புலஎண்களுக்கான நான்குமால்கள் தெரியுமா என்றால் தெரியும். புலஎண் 6/3க்கு நான்குமால் சொல்லமுடியுமா என்றால் வடக்கே மனோகர் தோப்பு தெற்கு, மேற்கு, கிழக்கு பழையனூர் கால்வாய் ஆகும். என் கணவர் 2006 ஆம் ஆண்டு சோணை என்பவரிடமிருந்து என் பெயருக்கு சொத்து வாங்கினார் என்றால் அவர் வாங்கவில்லை, நான் தான் வாங்கினேன்.

2. அரசுஊழியர் தன் பெயரிலோ, தன் குடும்ப உறுப்பினர் பெயரிலோ சொத்து வாங்க வேண்டும் என்றால் உயர் அதிகாரியிடம் அனுமதி வாங்க வேண்டும் என்றால் என் பெயரில் வாங்கியதால் தேவையில்லை. என் கணவர் அனுமதி கோரி விண்ணப்பம் எதுவும் கொடுத்தாரா என்றால் அது எனக்கு தெரியாது. நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் வீட்டுக்குடுத்தனமாக இருக்கிறேன். புல எண் 6 எத்தனை உட்பிரிவுகளாக உள்ளது என்றால் 6/2, 6/3 ஆக உள்ளது. புல எண் 6/1 என உட்பிரிவு உள்ளது தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புல எண் 6/1க்கான பட்டாவில் விஸ்தீரணம் 0.06.00 ஏர்ஸ் என விஸ்தீரணம் உள்ளது என்றால் சரிதான்.**( சாட்சி ஒப்புக்கொண்டதால் புல எண் 6/1க்கான கணினி பட்டா பி.வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. என்னிடம் காட்டப்படும் புல எண் 6க்கான எஸ்எல்ஆர் அபதிவேடு நகலில் 1ஏக்கர் 98 செண்ட் என விஸ்தீரணம் விஸ்தீரணம் உள்ளது என்றால் சரிதான்.**( சாட்சி ஒப்புக்கொண்டதால் புல எண் 6க்கான எஸ்எல்ஆர் அபதிவேடு பி.வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பி.வா.சா. ஆ. 2ல் பூச்சிபிள்ளை மற்றும் 2 நபர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பூச்சிப்பிள்ளையும் இன்னும் 2 பேர்களும் என்று உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள 1914 ஆம் ஆண்டுக்கான பத்திரத்தில் புல எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள நான்குமால்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1914 ஆம் ஆண்டு ஆவணத்தை எழுதிக்கொடுத்தவர் பெயர் என்னவென்றால் பூச்சி

வகையறா ஆகும்.

4. 1914 ஆம் ஆண்டு கிரையம் வாங்கிவர்கள் பெயர் நிலஉடைமை மேம்பாட்டு திட்ட(எஸ்எல்ஆர்) காலத்தில் கொடுக்கப்பட்ட பட்டாவில் பெயர் மாற்றம் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. 1914 ஆம் ஆண்டு பத்திரத்தில் என்னென்ன அளவுகள், நான்குமால்கள் உள்ளது என்பது எனக்கு தெரியாது என்றால் நான் கிரையம் வாங்கும் என்ன அளவுதான் எனக்கு தெரியும். 1914 ஆம் ஆண்டு ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் தெரியவில்லை. 1914 ஆம் ஆண்டு ஆவணம் மூலம் கிரையம் வாங்கியவர்களின் கொடிவழி ஜாபிதா தாக்கல் செய்துள்ளேனா என்றால் அனைத்து ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

5. என்னிடம் காட்டப்படும் யு.டி.ஆர் அபதிவேட்டில் பூச்சிப்பிள்ளை, மூக்காயி, வேலு என்ற பெயர்தான் உள்ளது என்றால் சரிதான். **( சாட்சி ஒப்புக்கொண்டதால் யு.டி.ஆர். அபதிவேடுக்கான நகல் பி.வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 கிரையம் ஆவணத்தில் புல எண் 6/13 என எழுதப்பட்டுள்ளது என்றால் ( சாட்சியிடம் ஆவணம் படிக்க கொடுக்கப்பட்டது) 6/2 என்றுதான் உள்ளது. மேற்படி ஆவணத்தில் அடைப்புக்குறிக்குள் என்ன உள்ளது என்றால் 6/2 தான் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 கிரையம் ஆவணத்தில் நான்குமாலில் மேற்குப்பக்கம் முத்துராமன் புஞ்சை என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். முத்துராமன் என்பவர் எனது மாமானார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றிதழில் 7.1.1985 ஆம் தேதியிட்ட ஆவணத்திற்குரிய வில்லங்கச் சான்றிதழ் என்றால் தெரியவில்லை.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.